[31st October 1962

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: காண்டலா என்ற சமுதாயமும் தேவகாண்டலா என்ற சமுதாயம் ஒன்றாக இருக்கின்றன. காண்டலா என்ற சமுதாயத்தை பாக்வேர்ட் கிளாஸில் வைத்திருப்பதால் தேவகாண்டலா சமுதாயத்தையும் பாக்வேர்ட் லிஸ்டில் வைக்க அரசாங்கம் முன்வருமா? இந்தச் சமுதாயம் குறைவான ஜனத்தொகை கொண்டுள்ளதால் இந்தச் சலுகையை இந்தச் சமுதாயத்திற்கும் நீடிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: பாக்வேர்ட் கம்யூனிட்டீஸ் லிஸ்ட் பற்றி பரிசிலனை செய்து முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பல பேர்கள் 'எங்களைச் சேருங்கள், எங்களைச் சேருங்கள்' என்று வற்புறுத்தி வருகிறார்கள். அரசாங்கம் இனிமேல் அப்படிச் செய்வதற்கில்லை என்று முடிவு எடுத்திருக்கிறது.

சமூக நல ஊழியர்கள்

* 1010-கே. கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியனில் உள்ள சமூக நல ஊழியர்களின் வேலைகள் என்ன?

(இ) அவர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) The duties of the Social Welfare Workers are

(i) To assist the Social Education Organisers in implementing the Community Development Programme; and

(ii) To attend to propaganda in respect of Harijan Uplift, Prohibition and Publicity for the Five-Year Plans.

(b) Political sufferers and members of their families alone are eligible for appointment to the post. No educational qualification has been prescribed for the post. Only people with good general knowledge about the Community Development Programme and the nation building activities and with rural bias and capacity to do propaganda are selected for the post.

திரு. கரு. சீமைச்சாமி: பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள இந்தச் சமூக நல ஊழியர்கள் காங்கிரஸ் கட்சிக்காகப் பிரசாரம் செய்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரிய வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அம்மாதிரி அரசாங்கத்தினிடம் தகவல் ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏதாவது புகார் இருந்தால் அதை எழுதி அனுப்பலாம்.

* 1010-L Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the posts of Social Welfare Workers in the Block Development Offices are created for giving employment to the Political sufferers; and

31st October 1962]

(b) if so the number of Political sufferers of Salem district who have been provided with employment?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

**(b) Sixty-six political sufferers (including members of their** families) from Salem district have been appointed as Social Welfare Workers till 20th September 1962.

**திரு. ம. கமலநாதன் :** 'அரசியல் தியாகிகளுக்கு மட்டுமல்லாமல் மாஜி ராணுவக் குடும்பத்தினருக்கும் இந்தச் சலுகைகளை அளிப்போம்' என்று அண்மையில் வந்த அரசாங்க ஆணை கூறுகிறது. அப்படி எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாஜி ராணுவத்தினருக்கும் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் எந்த வேலைக்குத் தகுதியோ அந்த வேலை அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** சமூக நல ஊழியர் வேலைக்குக் காங்கிரஸ்காரர்கள்தான் அமர்த்தப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** காங்கிரஸ்காரர்கள் என்று அங்கத்தினர் அவர்களை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் எந்த ஹோதாவில் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள் என்றால் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகள் என்ற ஹோதாவில் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

**திரு. ம. கமலநாதன் :** பொதுமக்களுக்கு உண்மையாக, நேரடியாக, உடனடியாக, அவர்கள் தேவைகளைச் செய்து கொடுக்கும் பஞ்சாயத்து யூனியன்களில் இப்படிப்பட்ட அரசியல் புகுவதால் அவைகளின் அபிவிருத்தி வேலைகள் தடைப்படுகின்றன. ஆகவே, அரசியல் தியாகிகளுக்குத் தனியாக வேறு உத்தியோகம் கொடுத்துவிட்டு இதிலே சம்பந்தப்படுத்தாமல் இருப்பது நல்லது என்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த நியமனங்களால் அரசியல் புகுத்தப்படுகிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Is the Government aware that they have been doing good work and also inculcating into the minds of the people the activities of the Panchayat Union Councils?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am obliged to the hon. Member for this clarification.